டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி

முத்தமிழ் மன்றம்

நமது கல்லூரி வளாகத்தில் முதன் முறையாக தொடங்கிய சங்கம் நமது முத்தமிழ் மன்றம். மன்றத்தின் தலையாகிய நோக்கம் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அன்னை தமிழ் வழியே அதற்கு ஊன்றுகோலாக நின்று அவர்களது திறமைகளை மென்மேலும் ஊக்குவித்தலே ஆகும் .

மாணவர்களின் ஆற்றலை போட்டிகள் மூலமாக அறிய முடியும். ஆதலால் நமது மன்றத்தின் மூலம் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப்போட்டியும் நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழின் ஈர்ப்பை இக்கால மாணவர்களிடம் அறிந்து கொள்ள பல்வேறு பழமொழிப் போட்டிகள் வெவ்வேறு கோணங்களில் நடத்தப்பட்டது மேலும் அறிவியல் சார்ந்த கேள்விகளும் பலவிதமான போட்டிகளாக நடத்தப்பட்டன.மாணவர்களின் ஆற்றலை மென்மேலும் ஊக்குவிக்க பல்வேறு பரிசுகள் போட்டியாளர்களின் திறமைக்கேற்ப வழங்கப்படும்.

இக்கால சமூகத்தில் இருதரப்பு வாதங்களும் இருதரப்பில் நியாயங்களாகவே அமைந்துள்ளது, அதனை முன்னிட்டு , நமது முத்தமிழ் மன்றம் பல விவாத மேடைகள் மூலம் மாணவர்களுக்கு தலையாய கருத்துக்களை கொண்டு சேர்த்துள்ளோம்.

இத்தக விவாத மேடைகள் மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை உணரவும், அவர்களுக்கான சரியான பாதையினை அவர்களது விவாதத்தின் மூலமே அறியவும் உதவுகிறது.

ஒரு புத்தகத்தை வாசிப்பதன் மூலம் உணரக்கூடிய கருத்துக்களை ஒரு சிறு நாடகம் நொடிப்பொழுதில் உணர்த்தி விடும்.இவ்வாறு நாடகங்கள் நடத்துவதன் மூலம் மாணவர்கள் தங்களது நடிப்பு திறமைகளையும் , பேச்சு திறமைகளையும் ஒருங்கிணைந்து வளர்த்துக் கொள்ள முடியும்.

அனைத்து வித சமுகத்தைச்சார்ந்த மாணவர்களும் இச்சங்கத்தின் மூலம் ஓரினைந்து , இச் சமுதாயத்தினை பல விதமான நட் கருத்துக்கள் மூலம் எதிர்கொள்ள , தம்மைத் தாமே ஆசிரியர்களின் வழிகாட்டல் மூலம் உருவாக்கிக்கொள்ள ஒரு சிறந்த மன்றம் நமது முத்தமிழ் மன்றம்.